# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
(Peer Reviewed Journal)
ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

*Vol:6 Issue :23 July 2024*

கோட்டை:6 வாயில்:23 ஜூலை 2024

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

# Aran

*International e Journal of Tamil Research*



## ஆசிரியர் குழு

முனைவர் ஸ்டீபன்
முனைவர் ஒ முத்தையா
முனைவர் உமாதேவி
முனைவர் இராஜேந்திரன் முனியாண்டி
முனைவர் மணிமாறன் சுப்ரமணியம்
முனைவர் சில்லாழி எஸ்.கந்தசாமி
முனைவர் பொ. சுரேஷ்
முனைவர் ப.தனஞ்செயன்

கலாநிதி ஸ்ரீவரதராஜன் பிரசாந்தன்
முனைவர் ஸ்வர்ணவேல் ஈஸ்வரன்
பேரா. முனைவர் வீ.செல்வகுமார்
முதுமுனைவர் *V*.வெங்கட்ராமன்
முனைவர் போ.கந்தசாமி
முனைவர் *P*.பாண்டிக்குமார்
முனைவர் ந. குமாரி
முனைவர் தயாநிதி
முனைவர் சந்திரசேகர்



## நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்

## இதழாக்கம்

திரு ப. ஜெயகிருஷ்ணன்

## முதன்மை ஆசிரியர்

முனைவர் பிரியாகிருஷ்ணன்

**+917299587879**

www.aranejournal.com
aranjournal@gmail.com


அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.


Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

# அகத்தினுள்


ஐங்குறு நூற்றில் நீர் நிலைகள்
பா. ரம்ஜான்

சங்ககால தமிழரின் பகுத்துண்டு பல் உயிர் ஓம்புதல்"பண்பாடு
முனைவர் ப. மணிகண்டன்

கவிதைக்கும் மெய்ப்பாட்டிற்கும் உள்ள தொடர்பு
செ. கயல்விழி

அறநெறி இலக்கியத்தில் தமிழர் மருத்துவம்
அ. குழந்தைசாமி

சிலப்பதிகாரம் காட்டும் நீர் வழிப்பயணங்கள்
சித்ரா.ரா

திருக்குறளில் வாய்மையில் சமரசம்
முனைவர் து. சிவசித்ரா

தமிழில் சொல்லகராதிகள் உருவாக்கமும் பயன்பாடும்
முனைவர் பூ. சேகர்

ஏகன் அநேகன்
அகல்யா தர்மலிங்கம்

Bhakti Marga of Saint Thyagaraja
R. Sudhalakxmi

The Evolution of Tattvas in Samkjya Philosophy
Varun Srivatsan

வேள் பாரிநாவலில் மன்னனும் மக்களும்
பொன். கனகா



அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி

# அகத்தினுள்


யாரைக் கேட்டது இதயம் புதினத்தில் சமூகப்பார்வை
அ. சையதுஅலி பாத்திமா

என்.ஸ்ரீராம் கதைகளில் விளிம்பு நிலைமக்கள்
சுதா .மு

மேலாண்மை பொன்னுசாமி படைப்புகள் போற்றும் மானுட பிரவாகம்
கோ. சத்யா

வண்டிப் பாதை நாவல்காட்டும் இயற்கை மருத்துவம்
சு. சத்தியப்பிரியா

பொன்னீலனின் மறுபக்கம் புதினத்தில் சிறு தெய்வங்களும் அதன் வழிபாட்டுமரபுகளும்
திருமதி சு.வினோதா

ஒப்பியல் நோக்கில் சைவ கிறிஸ்துவ குருத்துவம்
பூபாலசிங்கம். தனேஸ்

Representation of Culture in English Language Textbooks
U. Thulasivanthana

பழங்குடி மக்களின் சித்திரைத் திருவிழா சடங்கு முறைகள்
கா. இராஜமாணிக்கம்

பழங்குடி மக்களின் மாட்டுப் பொங்கல் விழா சடங்கு முறைகள்
கா. இராஜமாணிக்கம்

தமிழகக் கல்வெட்டுகளில் கோயில் நிவேதன உணவுகள் - ஓர் ஆய்வு
முதுமுனைவர் பிரியாகிருஷ்ணன்

கல்வெட்டுகள் வாயிலாக அறியவரும் மருத்துவ செய்திகள்
அ. குழந்தைசாமி



அட்டைப்படம் உதவி
இணையம்
நன்றி


தமிழ்

# வண்டிப்பாதை நாவல் காட்டும் இயற்கை மருத்துவம்

*Carriage Novel Shows Natural Medicine*

முனைவர் ந. இரமாபிரபா எம்.ஏ.,எம்ஃபில்.,பிஎச்.டி.,
இணைப்பேராசிரியர்,
முதுகலை மற்றும் தமிழ் உயராய்வுத்துறை,
அரசு கலைக் கல்லூரி,
உடுமலைப்பேட்டை- 642 126

சு. சத்தியப்பிரியா
முனைவர் பட்ட ஆய்வாளர்
அரசு கலைக் கல்லூரி,
உடுமலைப்பேட்டை- 642 126

**ஆய்வுச் சுருக்கம்**

ஆதி மனிதனும், விலங்குகளும் நோயிலிருந்து தம்மை பாதுகாத்துக் கொள்ள செடி, கொடி, மூலிகைகளை நாடினர். மனிதனும், விலங்குகளும் இடம் விட்டு இடம் பெயரும் இயல்பு இருப்பதால் செல்லும் இடங்களிளெல்லாம் இயற்கை மருந்துகளை அறிந்துக் கொண்டான். இது தொன்மைக் காலந்தொட்டே வாய்மொழியாகவும், வழிவழியான நம்பிக்கையின் அடிப்படையிலும் மக்களிடம் நிலைப் பெற்று வருகின்றது. இம்மருத்துவ முறை கிராமங்களில் மட்டுமே அதிகமாக பயன்படுத்தப்பட்டு வருகின்றன. தனக்கு மட்டுமல்லாமல் தன்னைச் சார்ந்து வாழும் வீட்டு விலங்குகளுக்கும் இயற்கை மருத்துவத்தையே மனிதன் பயன்படுத்தி வருகின்றான்.

**திறவுச்சொற்கள்**

இயற்கை மருத்துவம், நம்பிக்கை, மந்திரித்தல், வீட்டு மருத்துவம், விலங்கு மருத்துவம்,

***Abstract;***

*Primitive man and animals sought plants, vines and herbs to protect themselves from disease. As humans and animals tend to move from place to place, he got to know natural medicines wherever he went. It has been established in the people since ancient times orally and on the basis of traditional belief. This method of medicine is mostly used in villages only. Man has been using naturopathy not only for himself but also for domestic animals that depend on him.*

*KEeywords: naturopathy, faith, magic, home medicine, veterinary medicine,*

**முன்னுரை**

ஆதிமனிதன் இயற்கையோடு இணைந்த வாழ்வு வாழ்ந்தான். பருவகால மாற்றத்திற்கு ஏற்ப தன்னை மாற்றிக்கொண்டான். இயற்கையினால் ஏற்படும் நோய்களுக்கு இயற்கையின் மூலமாகவே தீர்வைக் காண எண்ணினான். எனவே, விலங்குகளின் தாக்குதலுக்கும்,

வேட்டையாடி வாழ்ந்த காலத்தில் தனக்கு ஏற்பட்ட காயத்திற்கு செடி, கொடிகளை மருந்தாகப் பயன்படுத்தினான். அந்த மருந்தால் நோய் குணமாகிவிடும் என்று நம்பிக்கையும் வைத்திருந்தான். அந்த நம்பிக்கையே இயற்கை மருத்துவம் தோன்ற காரணமானது. அக்காலம் தொட்டு இன்று வரை இயற்கை மருத்துவம் மனிதனோடு ஒன்றிணைந்து வருகிறது. இத்தகைய இயற்கை மருத்துவம் குறித்து குமாரகேசனின் "வண்டிப்பாதை" நாவல் கூறும் கருத்துகளை இக்கட்டுரை ஆராய்கிறது.

**இலக்கியம் காட்டும் மருத்துவம்**

மனிதன் தன் அன்றாட வாழ்க்கையில் நோயில்லாமல் இருந்தால் தான் மற்ற செயல்களில் முழுமையாக தன்னை ஈடுபடுத்திக் கொள்ள முடியும்.

" அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது , மானிடராயினும் கூன், குருடு, செவிடு, பேடு நீங்கிப் பிறத்தல் அரிது " என மனிதப் பிறவியின் மகத்துவத்தை ஔவையார் சிறப்பிக்கின்றார். இத்தகைய மனிதப் பிறவியில் நோயில்லாமல் வாழ்வது அதனினும் சிறப்புடையது. சுவரை வைத்துதான் சித்திரம் வரைய வேண்டும் என்பது பழமொழி. சுவர் இடிந்தால் சித்திரமும் அழிந்து போகும். அதுபோல உடல் நலிந்தால் வாழ்க்கையே போய்விடும். அதனால் இவ்வுலகில் உடல் நலத்தைப் பேணிக்காப்பது இன்றியமையாதது ஆகும். ஆகவே தான் திருமூலர்,

**" உடம்பார் அழியின் உயிரார் அழிவர் "** [1] (திருமூலர், திருமந்திரம் பா-724)

என்று நோயில்லா மேனி வேண்டுமென்று சிறப்பித்துக் கூறுகின்றார்.

நோய் உண்டாவதற்கு முக்கியக் காரணம் உடலில் உண்டாகும் நோய் மட்டுமல்ல, மனதில் உண்டாகும் மனக் கவலையே ஆகும். உடல் நோயை மருந்து மூலம் தீர்க்க முடியும். மனத்திற்கு நம்பிக்கை மட்டுமே மிகப்பெரிய மருந்தாகும். அதனால் தான் நாம் மருத்துவரை நாடும்போது அவர்தம் அறிவுரையே பாதி நோயைக் குணப்படுத்தி விடும் என்று நம்புகிறோம்.

**" நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்**

**வாய்நாடி வாய்ப்பச் செயல் "** [2] (குறள்-948)

என்ற குறளின் வழி நோயாளியின் உடல் மாற்றங்களால் வந்துள்ள நோயை என்னவென்று அறிந்து அந்த நோய் வருவதற்கான காரணத்தையும், அதைத் தீர்க்கும் வழியையும் அறிந்து அதைச் சரிச் செய்யும் வகையில் மருத்துவம் அமைதல் வேண்டும்.

**"அரும்பிணி உறுநர்க்கு வேட்டது கொடாஅது**

**மருந்தாய்ந்து கொடுத்த அறவோன்"** [3] (நற்றிணை- 26)

நோய்வாய்ப்பட்டவர்களுக்கு அவர் விரும்பியது எல்லாம் கொடுக்காமல் நோய்க்குத்தக்க மருந்தை ஆராய்ந்து பார்த்துக் கொடுப்பவனை அறவோன் என்று நற்றிணை பாடல் வழி அறியமுடிகிறது. நோய் கணிக்கும் வழியைத் தெளிவாக அறிந்தப் பின் அவ்வழியில் விழிப்புடன் செயல்படவேண்டும்.

**"தமிழ் மருத்துவத்தில் மருந்துண்ணும் காலத்து உணவுக்கட்டுப்பாடு மிகக் கடுமையாகப் பின்பற்ற வேண்டியதொன்றாகும். எனவேதான் தமிழ் மருத்துவத்துவர்கள் நோயைப் பற்றி**

**எச்சரிப்பதை விட உணவுக்கட்டுப்பாடு பற்றி மிகையாக எச்சரிப்பார்கள் ”** [4] என்ற க. வேங்கடேசன் கருத்து கவனத்திற்குரியது.

**“வாயுறை வாழ்த்தே வயங்க நாடின்**

**வேம்பும் கடுகும் போல வெஞ்சொல் ”** [5] (தொல்-செய்-424)

என்ற தொல்காப்பிய நூற்பாவில் வாய் என்பது வாய்மொழி. உறை என்பது மருந்து. ஒருவருக்கு கடுஞ்சொல் சொல்லாது பின்னாளில் நன்மை பயக்க வேண்டிய அதாவது முன்னால் கசந்து பின்னால் உடலுக்கு நன்மை பயக்கும் வேம்பும் கடுகும் போல மருந்து உள்ளது எனக் கூறப்பட்டுள்ளது.

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களான திரிகடுகம், ஏலாதி, சிறுபஞ்சமூலம் ஆகிய மூன்றும் தம் பெயரிலேயே மருத்துவக் குறிப்புகளைக் கொண்டு திகழ்கின்றன.

**நாட்டு மருத்துவம்**

இந்திய மருத்துவமுறைகளில் தொன்மையானது சித்த மருத்துவம் எனும் நாட்டு மருத்துவம் ஆகும். நாட்டுப்புறங்களில் அக்காலத்தில் வீட்டுக் கொல்லைப்புறத்தில் மூலிகைச் செடிகளை நட்டு வளர்த்தார்கள். இவ்வாறு அவர்கள் வளர்த்தது நோய்க்கான அவசர கால மருந்தாகப் பயன்பட்டது.

நாட்டு மருத்துவம் இயற்கையோடும் மற்றும் தமிழ்பண்பாடு மற்றும் நாகரிகத்தோடும் இணைந்து வளர்ச்சியடைந்து வந்துள்ளது. டான்யாடர் எனும் அமெரிக்க அறிஞர் ,நாட்டு மருத்துவத்திற்கு **“வீட்டு வைத்தியம் ”**[6] என்று பொருள் தருகிறார். தலைமுறை தலைமுறையாகத் தெரிந்து கொண்ட அனுபவத்தின் உதவியோடு எளிய முறைகளில் வீட்டிலேயே நோய்களைப் போக்கிக் கொள்ளும் மருத்துவமுறையை நாட்டு மருத்துவம் என்கிறோம்.

**“நாட்டுப்பாடல்களில் பல அரிய மருத்துவ முறைகள் பாலில் வெண்ணெய் எடுப்பதுபோல அடங்கியுள்ளன. மருத்துவ புலைமை என்னும் மத்தினால் கடைந்தால் வெண்ணெய் திரள்வதுபோல பிணித் தீர்க்கும் மருத்துவமுறைகள் வெளிப்படும்”** [7] என்று க. வேங்கடேசன் கூறியுள்ளார்.

ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக நம் முன்னோர்கள் பயன்படுத்திய மருத்துவம், இன்றைய நவீன காலக்கட்டத்தில் உலக அறிவியல் அறிஞர்களின் ஆராய்ச்சிக்குப் பயன்படுத்தப்படுகிறன. எடுத்துக்காட்டாக மார்ச் 2020 மாதத்தில் உலக மக்களுக்கு பெரும் அச்சத்தையும், உயிரிழப்பையும் ஏற்படுத்திய ‘கொரோனா ’ எனும் கொடிய நோய்க்கு நாம் பயன்படுத்திய மருந்து இயற்கையாகக் கிடைக்கக்கூடிய நிலவேம்பு கசாயமும், கபசுர குடிநீர் மட்டுமே ஆகும். அதன் மூலம் அப்பாதிப்பிலிருந்து நாம் தப்பிப் பிழைத்துக் கொண்டோம் என்பது நாம் அறிந்த ஒன்று. நாட்டுப்புறங்களில் நோய்க்குக் காரணமாக தெய்வக்குற்றம், கண்ணேறு கழித்தல், பேய்ப்பிடித்தல், பில்லி, சூனியம் போன்றவை இருப்பதாக மக்களால் நம்பப்படுகின்றன. இதற்குத் தீர்வாக இரண்டு வகையாகப் பின்பற்றுகிறார்கள்.

1.இயற்கையான மருத்துவம்

2.மந்திரித்தல்

**1.இயற்கையான மருத்துவம்**

இயற்கையான மருத்துவம் என்பது இயற்கையாகக் கிடைக்கக் கூடிய செடி, கொடி, மூலிகைகளைக் கொண்டு எளிய வகையில் தயாரிக்கப்படும் மருத்துவம் ஆகும். 'தேவையே கண்டுபிடிப்பின் தாய் ' என்பதற்கேற்ப நோய்வாய்ப்பட்ட மனிதன் அதிலிருந்து விடுபட எண்ணி உருவாக்கப்பட்டதே இம்மருத்துவமுறை ஆகும்.

இந்நவீன உலகில் பின்விளைவுகள் இல்லாத மருத்துவம் இயற்கை மருத்துவம் ஆகும். பிறவற்றைச் சார்ந்து வாழ்ந்த மனிதன் அவற்றால் ஏற்படும் துன்பத்திலிருந்து விடுபட அவற்றைக் கடவுளாக வழிபட ஆரம்பித்தான். அந்த வழிபாடே மருத்துவத்தில் மந்திரித்தல் முறையானது.

**2.மந்திரித்தல்**

கை, கால், தோள்களில் ஏற்படும் சுளுக்குக்கு மட்டும் மருத்துவம் செய்வோரும் உண்டு. விஷக்கடிக்கும் மந்திரித்தால் விஷம் முறியும் என்ற நம்பிக்கையும் உண்டு. இன்று வரையும் இதுக் கடைப்பிடிக்கப்படுகின்றது. இவர்கள் பிற நோய்களுக்கான மருத்துவத்தை அறிந்துக் கொள்ள ஆர்வம் காட்டுவதிவல்லை. இவர்கள் அறிந்த மருத்துவத்தைப் பொறுத்தவரை நீவுதலில் உள்ள கைப்பக்குவமும், மந்திரத்தலும் இவர்களின் மருத்துவமுறை ஆகும். இதற்காக இவர்கள் பணம் வாங்குவதில்லை. மந்திரங்களை யாருக்கும் சொல்வதில்லை. பரம்பரை பரம்பரையாக இம்மருத்துவமுறையை சில குறிப்பிட்டவர்களே செய்து வருகின்றனர்.

கிராமப்புறங்களில் நோய்வாய்ப்பட்டால் முதலில் மந்திரித்தல் என்பது முதன்மையாக முன்னிறுத்தப்படுகிறது. அதைப்போலவே குமாரகேசன் நாவலில்,

**“ புள்ளைக்கு வயிற்றோட்டம் கண்டுகிச்சு, பச்ச பச்சையா ராத்திரியில நாலஞ்சு தடவ வயிறோடிப் போச்சு. ராத்திரியோட ராத்திரியா பூசாரி நாய்க்கர கூட்டிட்டு வந்து மந்திரிச்சாங்க. மந்திரிச்சக் கையோட மாதுளம் பிஞ்சையும் சேர்த்து மைய அரைச்சு ஒரு சங்கு ஊத்திவிடச் சொல்லிட்டுப் போனாரு ”[8] (வண்டிப்பாதை- 40)**

இவ்வாறு மந்திரித்தல் என்ற நம்பிக்கைச் சடங்கு ஆதிமனிதன் முதற்கொண்டு நம்பிக்கை என்ற அடிப்படையில் ஒன்றிணைந்து உள்ளது.எண்ணங்களுக்கு ஏற்பவே நம் உணர்வுகளும் உருவாகின்றன. உணர்வு நலமாக இருக்கும்போது உடலும் நலமாக அமையும் என்பதனை, **“ மலந்தேன் ஈ பத்து கடிச்சா பாம்பு வெசம் இருக்குமோன்னு பதர்றாங்க. நடதுவண்டு போச்சு பண்ணையகாரிச்சிக்கு”[9] (வண்டிப்பாதை-145)**

பயம் என்ற உணர்வே மனிதனை அழிவிற்கு கொண்டு போய் நிறுத்திவிடும்.

**“ ஆட்டுச்சாணி கொண்டாங்கடான்னு வைத்தியர் கட்டளை பிறப்பிக்கிறாரு” [10] (வண்டிப்பாதை-145)** மலந்தேனீ கொட்டி நேரம் நீண்டு விட்டதால் பண்ணையக்காரிச்சிக்கு ஆட்டுச்சாணியாகிய இம்மருந்தை உடல் ஏற்றுக்கொள்ளவில்லை. மலந்தேனீ கொட்டிய சில நொடிகளில் இம்மருந்தை பயன்படுத்தி இருந்தால் அவர் நலம் பெற்றிருப்பார். நவீன மருத்துவ உலகிலும் பாதிப்பிற்குள்ளான குறிப்பிட்ட நேரத்திற்கு உள்ளவரை மட்டுமே காப்பற்ற முடியும். இயற்கையும் அவ்வாறானதே.

**வீட்டு விலங்குகள்**

மனிதன் தனக்கு வரும் நோய்களை மட்டுமல்லாமல் தான் வளர்த்து வரும் ஆடு, மாடு போன்றவற்றிற்கு வரும் நோய்களைக் கண்டறிந்து அதற்குத் தக்க மருத்துவத்தையும் அறிந்து

வைத்திருந்தான். அவசியமாய் இருந்தது. முரட்டுத்தனமான வைத்திய முறைகளையும் அவன் கற்றுக் கொண்டிருந்தான்.

**''கி.மு. 2500 ஆம் ஆண்டுகளிலேயே மாடுகளுக்குக் கன்று ஈனுதல் சிரமம் ஏற்பட்டு அதற்குத் தக்கவாறு உதவிகள் செய்து நல்ல விதமாகக் கன்றுகளை வெளிக் கொணர்ந்த குறிப்புகள் எகிப்திய சக்கரா ஸ்துாபத்தில் உள்ளன. கி.மு. 2000 ஆம் ஆண்டுகளில் தான் கால்நடை மருத்துவமும், பயிற்சியும் எகிப்து முதல் ஆசிய நாடுகள் வரை சிறப்பாகக் காணப்பட்டன. இந்தியாவில் இக்காலக் கட்டத்தில் பழைய இந்துக்களின் குறிப்பேடுகளில் கால்நடை மருத்துவப் பயிற்சி உச்சநிலையில் இருந்தும் விலங்கினங்களை மிகவும் அதிகமாக மனிதன் அண்டியிருந்த விவரமும் விவரிக்கப்பட்டிருந்தன ''[11]. (ஞானபிரகாசம். வெ , மாணிக்கம் .இரா -1998 )**

மனிதனுக்கு கால்நடைகளால் தொழில்முறையில் இன்றளவும் வருமானம் கிடைத்து வருகிறது. தொழிலுக்கு மூலதனமான கால்நடைகளைப் பாதுகாத்தும் பராமரித்தலும் மனிதனுக்கு இன்றியமையாததாகிறது.

**" குறுநெறி கொண்ட கூந்தலாய் மகள்**

**அளவிலை உணவின் கிளைஉடன் அருத்தி**

**நெய்விலைக் கட்டிப் பசும்பொன் கொள்ளாள்**

**எருமை நல்ஆன் கருநாகு பெறூஉம்..."[12] (பெரும்பாண், வரி 162-165)**

என்ற பெரும்பாணாற்றுப்படை வரிகளின் மூலம் ஆய்ச்சியர் மோர் விற்ற பணத்தில் பொன்னை வாங்கிச் சேர்க்காமல், எருமை, பசு போன்றவற்றை அதன் கன்றுகளோடு சேர்த்து வாங்கினார்கள் என்பதை அறியமுடிகிறது. ஆகவே, பொன்னைக் காட்டிலும் பசு, எருமை போன்ற வீட்டு விலங்குகளுக்கு மக்கள் முன்னுரிமைக் கொடுத்தார்கள்.

**"சொக்கிக் கிட்ட ஆடு மாட்டுக்கு எருக்கத்தண்ட வாயில தொண்ட வரைக்கும் திணிச்சாலும்... எருக்கம் பால் காட்டத்துல மூச்சுக்காய அடைச்சிக்கிட்டிருக்கற பசை உள்ள இறங்கிடும் மொளக்காயப் பொடிய வாயில போட்டு விட்டாலும் காரத்துல உமிழ்நீர் சுரந்து உள்ள விழுங்குச்சுன்னா அடைப்பு நீங்கிக்கும்"[13.] (வண்டிப்பாதை — ப.33)**

இளம் சோளக் கதிரை மாடு தின்னும்போது தீவனச் சுனைகள் மாட்டின் உள்நாக்குப் பகுதியில் செருகிக் கொண்டு மாட்டுக்குத் துன்பத்தைக் கொடுக்கும். இதனையே 'சொக்கிக் கொள்ளுதல் ' என்கின்றனர். இதற்கு ஆலங்கட்டி மழைக் கட்டியை பாட்டிலில் சேகரித்து சொக்கும் தருவாயில் உள்ள விலங்குகளுக்கு கொடுப்பதால் குணமாகிவிடுவதாகவும் தகவல்கள் உண்டு.

### முடிவுரை

நோய் வந்த பிறகு மருந்து தயாரிப்பது இயற்கை மருத்துவமாகும். தாங்கள் அறிந்துள்ள மருந்துகளைப் பற்றி நோயாளிக்கு தாமாகவே முன் வந்து சொல்லும் போக்கு இயற்கை மருத்துவத்தில் இன்றளவும் காணப்படுகிறது. இப்போக்கு நவீன மருத்துவத்திற்கு ஏற்றதல்ல. நோய் தீர்க்கும் ஆற்றலும் அவர்களிடத்தே இம்மருத்துவமுறை மீது நம்பிக்கை ஏற்படுத்துகிறது. எளிமையும், நற்பலனுமே இயற்கை மருத்துவத்தில் முன்னுதாரணமாக கிராமங்களில் வேரூன்றி நிற்கின்றது. இயற்கை மருத்துவமே சிக்கனமானதாகவும், பின் விளைவுகள் இல்லாததாகவும் இருக்கின்றது.

**அடிக்குறிப்பு**

1. திருமூலர். திருமந்திரம் பா- 724
2. திருவள்ளுவர். திருக்குறள் — 948
3. நற்றிணை . பா-126
4. வேங்கடேசன். க. தமிழ் இலக்கியத்தில் சித்த மருத்துவம். ப-157
5. தொல்காப்பியர். தொல்காப்பியம் செய்-424
6. சரஸ்வதி. வி. நாட்டுப்புற பாடல்கள் சமூக ஒப்பாய்வு ப.76 இல் மேற்கோளாக ஆளப்பட்டுள்ளது.
7. வேங்கடேசன். க. தமிழ் இலக்கியத்தில் சித்த மருத்துவம். ப-21
8. நாவல் குமாரகேசன். வண்டிப்பாதை. ப.40
9. மேலது. ப-145
10. மேலது . ப-145
11. ஞானபிரகாசம் .வே, மாணிக்கம். இரா , விலங்குகளால் வரும் நோய்கள் ப-9
12. பெரும்பாணாற்றுப்படை பா-162-163
13. நாவல் குமாரகேசன். வண்டிப்பாதை. ப.33

**துணை நூற்பட்டியல்**


1. நாவல் குமாரகேசன் - வண்டிப்பாதை
   அன்னை ராஜேஸ்வரி பதிப்பகம்
   சென்னை
2. இளம்பூரணர் (உ.ஆ) - தொல்காப்பியம்
   கழக வெளியீடு
   சென்னை
3. துரைசாமிப் பிள்ளை ஔவை .சு - நற்றிணை மூலமும் உரையும்
   கழக வெளியீடு
   சென்னை
4. சாமிநாதய்யா. உ.வே. - பத்துப்பாட்டு மூலமும்
   நச்சினார்க்கினியர் உரையும்
   உ.வே.சா நூல் நிலையம்
   சென்னை
5. சுப்பிரமணிய பிள்ளை கே. - திருமந்திரம்
   ஸ்ரீகுருபரன் மன்றம்
   ஸ்ரீவைகுண்டம்
6. வேங்கடேசன். க. - தமிழ்இலக்கியத்தில்சித்தமருத்துவம்
   ஸ்ரீசக்தி பதிப்பகம்
   சென்னை
7. ஞானபிரகாசம் .வே, மாணிக்கம். இரா - விலங்குகளால் வரும் நோய்கள்
   NCBH சென்னை

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.
வரும் 2024, அக்டோபர் மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள்-அக்டோபர் 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் அக்டோபர் இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com